# கோகுலத்தில் குதூகலம்



## கிருஷ்ணாவதாரம்

பரீஷித் ஏழு நாட்களே உள்ள தனது முடிவு காலத்தில், ஸ்ரீ க்ருஷ்ணனின் திவ்ய சரித்திரத்தை, இடையறாது கேட்கும் பேறு படைத்தவன். அவன் சுகதேவரை, மாயா மனுஷ்யனான  ஸ்ரீ க்ருஷ்ணனின் வரலாற்றை விஸ்தாராமாக கூற வேண்டும் என்று பிரார்த்திக்கிறான்.

ஸ்ரீ சுகதேவர் பரீக்ஷித்திடம் கூறுகிறார்.பகவானின் திவ்ய சரித்திரத்தை, கேட்பவன், சொல்பவன், சொல்லத் தூண்டுபவன் ஆகிய மூன்று சாரார்ரான பக்தர்களைப் புனிதப் படுத்துகிறது.

## கிருஷ்ணாவதாரத்தின் முக்கிய காரணம்

கட்டுக்கடங்காத அஸுர சக்திகளின் பெருக்கத்தினாலும், ஆதிக்கத்தினாலும் பூமா தேவி அல்லலுற்று, பசுவின் வடிவையேந்தி, கண்ணீருடன் ப்ரம்மதேவனிடம் சென்று முறையிட்டாள். அவள் துயரத்தைப் போக்க, ப்ரம்மதேவன் பரமசிவனுடனும், தேவ கணங்களுடனும், பாற்கடல் சென்று, ஸ்ரீ நாராயணனை துதித்து, பின் நாரயணனின் திருவாக்கைக் கேட்டு, தேவர்களுக்கு அதை உரைக்கலானார். பூமியின் பாரத்தைப் போக்க, நாராயணன், பூலோகத்தில், யாதவ குலத்தில், வசுதேவருக்கு திருமகனாக பிறக்க திருவுள்ளம் கொண்டுள்ளார் என்றும், தனது அம்சமான ஆதிஷேசனும், முன்பே ஜனிக்கப் போகிறார் என்றும், இந்த காரியத்தில், துணையாக விஷ்ணு மாயையும் ஜனிக்கப் போகிறாள் என்றும், தேவர்களும், தேவஸ்தீரிகளும் அவ்வமயம் யாதவ குலத்தில், தங்கள் தங்கள் அம்சமாகப் பிறக்க பகவானின் கட்டளை என்றும் கூறக் கேட்ட பூமாதேவியும், தேவர்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## கம்ஸனின் பீதி

யாதவர்களின் அரசனான சூரஸேனனின் மைந்தனான வஸுதேவருக்கும், உக்ரஸேனனின் புத்திரியான தேவகிக்கும் திருமணம் நடந்து, தேவகியின் ஸஹோதரனான கம்ஸன், அவர்களை ரதத்தில் ஏற்றி, தானே ஸாரத்தியம் செய்து, அழைத்துச் சென்ற போது, வழியில் திடீரென அசரீரி வாக்கு இடியென முழங்கியது.அடே கம்ஸனே! நீ ஒரு மூடன்! தேவகியின் எட்டாவது கர்ப்பம், உனக்கே யமனாக வாய்க்கப் போகிறது என்பதை கேட்ட மாத்திரத்தில், உடனே வாளை உருவி, தேவகியின் கூந்தலைப் பிடித்து, அவ்விடமே கொன்று விடத் துணிந்த போது, வசுதேவர்,

பாபச் செயலை செய்யாதே என்று பலவாறு வேண்டியும், அதை கருத்தில் கம்ஸன் கொள்ளாததினால், வசுதேவர் இவ்வாறு கூறினார். உனக்கு ஏன் பயம்? தேவகிக்கு பிறக்கும் எல்லாக் குழந்தைகளையும், உன்னிடமே ஒப்படைக்கிறேன் என்று வாக்களிக்கிறேன். இவளை மாத்திரம் கொன்று விடாதே என்று கூற, கம்ஸன் தேவகியைக் கொல்லும் முயற்சியைக் கை விட்டான்.

காலக்ரமத்தில் தேவகிக்கு முதல் குழந்தைப் பிறந்தவுடன், சத்திய சீலரான வஸுதேவர், அந்த சிசுவை கம்ஸனிடத்தில் ஒப்படைக்க, கருணையுள்ளம் கொண்டு, கம்ஸன், அக்குழந்தையினால், தனக்குஆபத்து இல்லையென்றும், தேவகியின் எட்டாவது சிசுவினால் தான் எனக்கு மரணம் என்று வஸுதேவரிடம் திருப்பிக் கொடுத்தான்.
இதன் பிறகு நாரதர் கம்ஸனிடம், வசுதேவர், தேவகி போன்ற யாதவர்கள், விருஷ்ணிகள் யாவரும் தேவர்களே. அசுரர்களான உன்னையும், உன் சுற்றத்தாரையும் கொல்ல மஹாவிஷ்ணுவே உல்கில் அவதரிக்கப் போகிறார். ஆகையால் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கூறியவுடன், கம்ஸன் வஸுதேவரையும், தேவகியையும்,விலங்கிட்டுசிறையில் அடைத்தான். தனது தந்தையையும் ஒடுக்கி, ராஜ்யத்தை ஆண்டு, பின் தேவகிக்கு பிறந்த எல்லா சிசுக்களையும் ஒன்று விடாமல் கொன்று விட்டான்.

## பகவானின் திருவாவதாரம்

கம்ஸன் ஜராஸந்தனுடன் சேர்ந்து, யாதவர்களைத் துன்புறுத்தத் தலைபட்டபோது, யாதவர்கர்கள் பலதேசங்ககளை நாடிப் பிரிந்து சென்றனர். தேவகியின் ஆறு சிசுக்களைக் கம்ஸன் கொன்ற பிறகு, அவள் ஏழாவது முறையாக கர்ப்பமுற்றாள். அந்த கர்ப்பத்தில்

வளர்ந்து வந்தது ஆதிசேஷன் என்றும், அனந்தன் என்றும் புகழப்பட்ட விஷ்ணுவின் சக்தி தான்.

அந்த சமயம் பகவான் தனது யோகமாயையை அழைத்து கட்டளையிட்டார். தேவியே! தேவகியின் வயிற்றில் வளர்ந்து வரும் எனது கருவை இழுத்து, நந்தகோகுலத்தில் வசித்து வரும் வஸுதேவரின், இன்னொரு மனைவியான ரோஹிணியின் வயிற்றில் சேர்ப்பித்து விடு. நான் மறுபடியும் தேவகியின் கருப்பையில் எட்டாவது கர்ப்பமாக வளர்ந்து வரும் அதே சமயம் நீ நந்தகோபன் மனைவி யசோதையின் கருப்பையில் வளர்ந்து வருவாய். நீ அவளுக்கு மகளாகப் பிறந்து துர்க்கை, வைஷ்ணவீ என்றும் பலபெயர்களால் போற்றப்படுவாய். எனது அம்சமாக ரோஹிணியிடத்தில் பிறந்த குழந்தைக்கு ராமன் என்றும், பலன் என்றும், ஸங்கர்ஷணன் என்றும் பெயரிடுவார்கள். கட்டளைகளை நிறைவேற்ற யோகமாயா சென்ற பிறகு, ஸ்ரீ பகவான் தேவகியின் உதரத்தில் எட்டாவது கர்ப்பமாகப் பிரவேசம் செய்தார். அப்பொழுது தேவகியின் உருவம் ஒளிப்பிழம்பாக ஒளிர்விட்டுப் பிராகசித்தது. இந்த தடவை, அவளுடைய காந்தியைக் கொண்டே, தன்னை கொல்ல வரும் யமன் நிச்சயம் அவள் வயிற்றில் குடிகொண்டிருக்கிறான் என்று எண்ணி கம்ஸன் கலக்கமடைந்தான். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்வது போல், அவனுக்கு உலகம் அனைத்தும் விஷ்ணு மயமாக தோற்றம் அளித்தது.ப்ரம்மா சிவன் மற்றும் முனி சிரேஷ்டர்களும் ,தேவகணங்களும் தேவகியின் கர்ப்பத்தில் வளர்ந்து வரும் பகவானைப் பலவாறாகத் துதிக்கலானார்கள்.

பகவான் அவதரிப்பதற்கு முன்னறிவிப்பாக உலகத்தில், எல்லா மங்கள நலன்களும் ஏற்பட்டன. நதிகளில் நீர்

தெளிவாக ஓடிற்று. ஹோமங்களில் அக்னி கொழுந்து விட்டு எரிந்தது. தேவர்களும், ஸாதுக்களும் மனம் தெளிந்து சந்தோஷமாக இருந்தார்கள். வானில் எல்லா க்ரஹங்களும் நன்மை பயக்கும் நிலைகளில் இருந்தன. இருள் சூழ்ந்த நள்ளிரவில், சந்த்ரோதய காலத்தில்,சூரியனும் உதித்தது போல, (க்ருஷ்ண பக்ஷம்,அஷ்டமி) ரோஹிணி நக்ஷத்திரத்தில் பகவான் தேவகி மைந்தனாக ஜனித்தான். அப்பொழுது ஆகாயத்தில் மங்கள பேரிகைகள் ஆர்த்தன. கின்னர கந்தவர்கள் கானம் பாடினர். அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனமாடினர். மேகக் கூட்டங்கள் மென்மையாக முழங்கின. தனது திவ்ய திருக்கோலத்துடன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே அச்சிறு குழந்தையாக ஆவிர்ப்பவித்தார்.



சதுர்ப்புஜங்களுடன் சங்குசக்ரதாரியாய், கமல நயனம், மார்பில் ஸ்ரீவத்ஸம், கழுத்தில் கௌஸ்துபம்,பீதாம்பரம், நவரடத்ன கிரீட குண்டலங்கள், ஸ்வர்ண கங்கண, கேயூர, ஹார நூபுரங்கள் முதலிய திருவாபரணங்களுடன் நீலமேக ச்யாமளனாய், தேஜோரூபியாய், பார்க்க பார்க்கக் கண் கொள்ளாத திருக்காட்சியாக அவனை தேவகியும், வஸுதேவரும் கண்டு மகிழ்ச்சியும், ஆச்சரியம் கொண்டனர். கைகூப்பி

வஸுதேவரும் தேவகியும் துதிக்கலானார்கள். ஸர்வவ்யாபியான பரம்பொருள் நீ. அஸுரர்களை ஸம்ஹரிப்பதற்காகவே எங்களது க்ருஹத்தில் அவதரித்திருக்கிறாய். உனக்கு முன் ஜனித்த சிசுக்களை துஷ்டன் கம்சன் கொன்று விட்டான். உன்னையும் அவன் அண்டுவானோ என பயப்படுகிறேன். ஆகையால் நீ மஹாவிஷ்ணுவின் உருவமேயான இந்த திவ்ய ரூபத்தை மறைத்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டியவுடன் பகவான் தேவகி, வஸுதேவரைப் பார்த்து கூறலானார். பூர்வ ஜன்மத்தில் நீங்கள் செய்த தவத்தின் பலனாக, நீங்கள் கேட்ட வரத்தின் படி, நான் முதலிரண்டு பிறவிகளில், பிருச்னிக் கர்ப்பன் என்ற பெயரை கொண்டவனாக முதல் பிறவியிலும், உபேந்திரனாக இரண்டாவது பிறவியிலும், மூன்றாவதாக இப்பிறவியில் பிறந்துள்ளேன். முந்திய பிறவிகளை நினைவுபடுத்தற்காக, நான் இந்த தெய்வீக வடிவை இப்பொழுது உங்களுக்குக் காட்டினேன் என்று கூறி பகவான் தனது அமானுஷ்ய சரீரத்தை உபஸம்ஹரித்து ,ஒரு சாதாரண மனுஷ்ய சிசுவாய் ஆனார். இதே சமயத்தில் நந்தகோகுலத்தில், யசோதையின் மகவாக யோகமாயைப் பிறந்திருந்தாள்.



அச்சமயம் வஸுதேவர் செய்ய வேண்டியவற்றை, பகவான் அவருக்கு புத்திரூபமாக கட்டளையிட்டார். வஸுதேவர் சிறையில் பிறந்த சிசுவை எடுத்துக் கொண்டு புறப்பட நினைக்க, கை கால் விலங்குகள் தானாகவே அறுப்பட்டன. சிறைக்கதவுகள் தாமாகவே திறந்து கொண்டன. சிறைக்காவலர்கள் யாவரும் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்தனர். அப்பொழுது இடி மின்னலுடன் பெருமழை பொழிந்து கொண்டிருந்தது. ஆதிசேஷனே தனது படங்களை விரித்து குடை போல் சிசுவின் மீது நீர் படாவண்ணம், பின் தொடர்ந்து சென்றான். யமுனை, வெள்ளப் பெருக்குடன் பிரவாகித்தாலும், ராமனுக்குக் கடல் வழி விட்டது போல், வஸுதேவருக்குவழி விட்டாள். நந்த கோகுலம் சென்று வஸுதேவர், யசோதையின் பக்கத்தில் தனது சிசுவைக் கிடத்தி, அவளுடைய மகளாகப் பிறந்த சிசுவை எடுத்துக் கொண்டு திரும்பினார். இதை ஆண்டாள் தாம் இயற்றிய திருப்பாவையில்,

" ஒருத்தி மகனாய் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர"

என்று அருளுகிறாள்.
யோகமாயையின் ப்ரபாவத்தால், விலங்கு, சிறை, பூட்டு எல்லாமே பழையபடி இருந்தன.

## நந்தகோகுலத்தில் கோலாகலம்

கோகுலத்தில் குழந்தைகள் பிறந்த செய்தி கேட்டு, நந்தன் அகமகிழ்ந்தான். மங்கள ஸ்நானம் செய்து, வேத பண்டிதர்களை அழைத்து,ஸ்வஸ்திவாசனம், ஜாதகர்மாக்கள்,பூஜைகள் போன்றவற்றை, சிறப்புற செய்து,பிராம்மணர்களுக்கு பதினாயிரம் பசுக்களை, கோதானம் செய்தான். கோகுலம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு, தோரணங்கள், கொடிகள் முதலியன கட்டப்பட்டு, வெகு கோலாகலமாக காட்சியளித்தது.

கோபிகைகள் யாவரும் தங்களை உயர்ந்த வஸ்திரங்கள். ஆபரணங்கள் ஆகியவற்றால் அலங்கரித்துக் கொண்டு, ஆடியும் பாடியும் பாலகர்களின் ஜனனத்தை குதூகலாமாகக் கொண்டாடினார்கள்.

இடையர்களான கோபர்களும், கோபிகைகளும் தங்களுக்கே உரித்தான முறையில், க்ருஷ்ணன் பிறந்த வைபவத்தைக் கொண்டாடினார்கள். ஒருவருக்கொருவர் பால், தயிர், வண்ண நீர் ஆகியவற்றால் வாரியிறைத்துக் கொண்டும், வெண்ணெயை ஒருவர் மேல் ஒருவராக வீசி எறிந்துக் கொண்டும், ஆரவாரம் செய்து விளையாடினார்கள்.




இதனை பெரியாழ்வார் தாம் இயற்றிய பெரியாழ்வார் திருமொழியில், கண்ணன் பிறந்த போது, கோபியர்கள் கொண்டாடியதை

“ வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிட
கண்ணன் முற்றம் கலந்தளறாயிற்றே.

ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார்
நாடுவார், நம்பிரான் எங்குத்தான் என்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே.

என்று அருளியதைப் போல

நாமும் கண்ணனின் திவ்ய திருநாமங்களைப் போற்றும் பாசுரங்களைப் பாடி, ஆடி, பலவிதமான பட்சணங்கள் கண்டருளப் பண்ணி, எம்பெருமானுடைய அருட்கடாக்ஷத்தைப் பெற்று இன்புறுவோமாக.

---